# நந்தி

மாலை 3 } திருவள்ளுவர் ஆண்டு 1999
புரட்டாசி—அக்டோபர் 196? { மணி 12

## "நந்தி"யின் வேண்டுகோள்

இந்த இதழுடன், "நந்தி"க்கு மூன்று ஆண்டுகள் நிறைந்தன. சென்ற மூன்று ஆண்டுகளாக "நந்தி" செய்துள்ள தொண்டைப்பற்றி அன்பர்கள் அறிவர். இதுவரை "நந்தி"க்கு வைத்தியர்களும், சித்த வைத்தியத்தில் ஆர்வம் கொண்டவர்களும் அன்புடன் ஆதரவளித்த மைக்கு நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறோம். சித்த வைத்தியத்தின் வளர்ச்சிக்காகவும், அகில இந்தியாவிலும் சித்த வைத்தியத்தின் தனிச் சிறப்பைப்பற்றி பிரசாரம் செய்வதற்கும், மத்திய அரசில் சித்த வைத்தியத்திற்குத் தனிப் பிரதிநிதித்துவம் கிடைத்து, நிதி உதவியும், ஏனைய சலுகைகளைப் பெறுவதற்கும் தொடர்ந்து ஆக்கவேலைகள் செய்ய வேண்டிய தவசியம். எனவே, தொடர்ந்து பணியாற்றுவதற்கு, பழைய சந்தாதார்கள் தாமதமின்றி ஆண்டு சந்தா ரூபாய் ஐந்து அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். புதிய சந்தாதார்கள் சேரவும் உதவி செய்யவேண்டும். மற்றும், வைத்திய அபிமானிகள் நன்கொடையளித்து ஆதரிக்கவேண்டும்.

காகிதம், அச்சுக்கூலி முதலியவைகள் கூடிவிட்டதால், அன்பர்களுடைய ஆதரவிருந்தாலன்றி எதுவும் செய்ய முடியாது. நன்கொடையளித்தவர்கள், விளம்பரம் கொடுத்து உதவியவர்கள் முதலிய அனைவருக்கும் எமது நன்றி. தொடர்ந்து அவர்களுடைய ஆதரவையும், அன்பையும் வேண்டுகிறோம்.

## பல்லாண்டு கூறுகிறோம்

திருச்சிராப்பள்ளியில் உலகப் புகழுடன் விளங்கும் குரு மருந்துகள் நிலையத்தின் அதிபர், டாக்டர் இ. பி. மதுரம் அவர்கள், சில நாட்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்து இறைவனுடைய அருட் கருணையால், பூர்ண சுகம் அடைந்திருக்கிறார்கள். அவர்களை, "நந்தி" ஆசிரியர்

அண்மையில் நேரில் சந்தித்து, நீண்ட ஆயுளும், உடல் வலிமையும் இறைவன் அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று வாழ்த்தினர்கள். "நந்தி"யின் தலையாய ஆதரவாளர்களில் ஒருவரான டாக்டர் மதுரம் அவர்களுக்கு பல்லாண்டு கூறுகிறோம்.

## மருந்து உற்பத்தியாளர் சங்கம்

தமிழகத்திலுள்ள நாட்டு மருந்து உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தின் சிறப்புக் கூட்டமொன்று, "நந்தி" சென்றமாத இதழில் அறிவித்திருந்தபடி, 10—9—66 அன்று காலை பழனி ஆர். எம். கே இராஜமாளிகையில் கூடியது. சங்கத் தலைவர், வைத்தியக் களஞ்சியம் திரு. ஆர். எம். கே. சிவசுப்பிரமணிய ஓம் அவர்கள் தலைமை வகித்தார்கள். சங்கத்தின் நிரந்தர ஆலோசகர், தவத்திரு சுந்தரானந்த சரசுவதி அடிகள் மருந்துக் கட்டுப்பாடு சட்டத்தின் திருத்த விதிகளைப்பற்றி விளக்கம் கூறினர்கள். கூட்டு செயலாளர் திரு. எஸ். பி. வி. தங்கராஜ் அவர்கள், சட்டத்தால் மருந்து உற்பத்தியாளர்கள் எவ்விதம் பாதிக்கப் படுவார்கள் என்பதை தெளிவாக விளக்கினர்கள். திரு. வெ. மூத்து அடிகள், டாக்டர் ஆனந்தகுமார், மதுரை டாக்டர் சிம்மம் முதலியோர் பேசினர். செயலாளர், மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள மகஜரை (மற்ரேரிடத்தில் இந்த இதழில் வெளியாயிருக்கிறது) அங்கீகரிப்ப தாகவும், புது டில்லிக்குச் சென்று, பாராளுமன்ற உறுப்பினர்களில் முக்கியமானவர்களை பேட்டிகண்டு சங்கத்தின் கோரிக்கைகளை வற்புறுத்து வதற்கு ஒரு தூதுக் குழுவினரை நியமித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

சிறப்புக் கூட்டம் நடப்பதற்கு தம் மாளிகையில் இடமளித்து வந்திருந்த அனைவருக்கும் உணவு, சிற்றுண்டி யளித்து உபசரித்த திரு. ஆர். எம். கே. சிவசுப்பிரமணிய ஓம் அவர்களைப் பாராட்டுகிறோம். சங்கம் எதிர்காலத்தில் மிக அவசியமான பல திட்டங்களை உருவாக்கவேண்டி யிருப்பதால், எல்லா உற்பத்தியாளர்களும் சங்கத்தில் சேர்ந்து ஆதர வளிக்க வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

---

## அனுதாபம்

*திருச்சி நகர் சித்தவைத்திய மேதை, உயர்திரு S. G. லூர்து சாமி பிள்ளை அவர்கள், 28—8—66 தேதியில் காலமானர்கள். முசிறி சித்த மருத்துவர், ம. மூத்துக்கிருஷ்ணன் அன்னரின் சடலத்தின்மீது சித்தர் கொடிபோர்த்தி, மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தி அன்னரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சினர்.*

# சித்தமருந்து வரலாறு

(டாக்டர். பு. மு. வேணுகோபால் H. P. I M.)

(முன் இதழ் தொடர்ச்சி)

சோம சுந்தர பாண்டியன் அரசு புரிந்த காலம் இந்தியாவில் பதினெட்டு நாடுகள் திகழ்ந்து பதினெண் மொழிகளும் பொதிந்து கிடந்ததாகத் தெரிய வருகிறது. அதாவது சுமார் கி. மு. 600 எனலாம். அவருக்குப் பிறகு அவர் திருமகன் உக்கிர குமார பாண்டியன் அரசு எய்தினன். திங்கள் குடியில் தோன்றிய பாண்டியர் குடியானது மேன்மையடைந்தது. உக்கிர குமார பாண்டியன் அரசாட்சியில் மதுரை நகரம் மிக உன்னத நிலையை அடைந்தது. கொஞ்ச காலத்துக்குள் சோமசுந்தர பாண்டியனும் தடாதகைப் பிராட்டியாரும் சினகரம் சென்றடைந்தனர். அங்கே ஆலயம் எழுந்தது, உக்கிர வழுதி அரசு செய்யும் நாளில் சிறு கடற்கோள் உண்டாகவே அதைத் தடுத்து நகரத்தைக் காத்தார். பிறகு மழையில்லாமற் போக பஞ்சம் ஏற்பட்டு நகர மாந்தர்கள் பொதிகையை அடைந்தார்கள். இந்திரனால் மழை பெய்ய நாடு செழிப்புற்றது. ஆரந்தாங்கும் பாண்டியனென்னும் உக்கிர வழுதி தன் திருமைந்தன் வீரபாண்டியனுக்கு முடிசூட்டி இரண்டற பழைய ஒளியோடு நிறைந்து வீற்றிருந்தான்.

வீர பாண்டியன் மதுரையை அரசாளும் நாளில் அரபத்தன் என்ற பெயருடைய முனிவர் வந்தார். அவருடைய அருளினால் கல்லால மரத்தின் அடியில் வீற்றிருந்த தட்சணாமூர்த்தியினிடம் சக்தி ஆகமப் பொருள் அருளிச் செய்யப்பட்டார். வீரபாண்டிய னுக்கு அனேக வருடம் மகப்பேறு இல்லாமல் கடைசியில் அருந் தவத்தால் ஒரு ஆண் மகவை பட்டத்து அரசு ஈந்தாள். சின்னாட் களில் வேட்டையின்போது புலியின் வாயினால் வீரப்பாண்டியன் கொல்லப்படவே பட்டத்து அரசியும் உயிர் துறந்தாள். வீரப் பாண்டியனின் மற்றய காமக் கிழத்தியரின் குமாரர்கள் செல்வங் களைக் கவர்ந்து சென்றார்கள். ஆணைக்கு உட்பட்ட அமைச்சர்கள் தீர்க்க ஆலோசித்து சோமசுந்தரர் அருள் பெற்று வீரபாண்டியன் திருக்குமாரனுக்கு அபிடேக பாண்டியன் என்று நாமகரணமிட்டு முடிசூட்டினர்.

## கி. மு. 505

அபிடேக பாண்டியன் அரசாண்டு கொண்டிருக்கிற காலத்தில் கடல் பொங்கி மதுரை நகரை அழிக்கும்போல் இருந்ததை தடுத் தான். அக்காலம் தொடங்கி மதுரையம்பதி நான்மாடக் கூடல் என்று பெயர் பெற்றது. இவ்வாறாக பாண்டியன் இம்மையிற் செல்வத்தையடைந்து பின்பு நல்ல வீடு பேற்றை அடைந்திருக்கிற காலத்தில் ஒரு சித்தர் வந்தார்.

அச்சித்தர்,

" அட்ட வேங்கை யுரிவை கீண் டசைத்தகோ வணமுங்
ஒட்ட வீக்கிய புலியத னுடுக் கையு மிடத்தோள்
இட்டயோகப்பட் டிகையும் பொன்னிடை கட்டப்
பட்ட சஃரெலி வேத்திரம் படக்கையும் படைத்து''

—திருவிளையாடற்புராணம்

காட்சியளித்தார்.

இவ்விதமாக வந்த சித்தர் மதுரையம்பதியில் அநேக சித்து திருவிளையாடல்களை இயற்றினார். இச்சித்தர் மேல் பொருமை யுற்ற சித்தாந்த வாதிகள் மதயானையை ஏவினார்கள். அச்சித்தர் அவ்வானையைக் கொன்றார். இந் நிகழ்ச்சி அபிடேக பாண்டியன் மகன் விக்கிரம பாண்டிய அரச காலத்தில் நடந்தது. விக்ரமனுக் குப் பிறகு இராச சேகரன் அரசை ஏற்றான். அதே காலத்தில் திருவானைக் காவலில் கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன் (கி. மு 425) ஆண்டு வருவானாயினான். இராச சேகர பாண்டியன் வெள்ளியம்பலவானத்தே கான்மாறியாடிய திருக்கூத்து கண்டு களித்து தன் மகன் குலோத்துங்க பாண்டியனுக்கு முடி சூட்டி சிவலோகம் அடைந்தான். குலோத்துங்கன் நீதி வழுவாமல் ஆட்சி புரிந்து அனந்த குண பாண்டியனுக்கு அரசளித்து வீட்டினை அடைந்தான். இக் காலத்தில் சித்தாந்திகளாகிய சமனர்கள்(8000) எண்ணாயிரவர் தென்னகத்தில் நிறைந்திருந்தார்கள். அரசும் மக்களும் சைவத்தைப் போற்றுவதைச் சகிக்காதவர்களாய் தமிழை வளர்க்கும் பாண்டியனைக் கொல்ல முயன்றார்கள். அதற்குரிய வேள்வியினை செய்வாராயினர். அநேக முயற்சிகளையும் செய்து வருவாராயினர். இதற்கிடையில் அனந்த குணன் சிவபுரம் அடைய குல பூடணன் அரசாண்டபின் இவன் காலத்தில் வியாகரண பண்டிதர்கள் நியாய நூற் புலவர்களும், வேத முணர்ந்தவர்களும், வேள்வித் தீ ஓம்புவோர்களும் ஆகமங்களை போதிப்பவர்களும் மதுரையில் விளங்கா நின்றனர். இக்காலத்தில் காஞ்சியிலே அர சாண்ட சோழ மன்னன் சோமசுந்திரரை சினகரத்தில் பாண்டிய னுக்குத் தெரியாமல் வணங்கிச் சென்றனன். குல பூடண பாண்டி யன் தன் மகன் இராசேந்திரனுக்கு அரசைக் கொடுத்து வானர நாட்டை ஆளும் அரசுரிமை பெற்றனன்.

இராசேந்திரனுக்கும் காஞ்சி சோழ மன்னனுக்கும் போர் மூண்டது. சோழன் புறங்காட்டி ஓடினான். திரு பூவனத்தில் உருத்திர கணிகை என்று ஓர் நங்கை இருந்தாள். அவள் பால் இரங்கி சித்தர் சுந்தரர் இரசவாதம் செய்தருளினார். இம்மன்னனுக் குப் பிறகு இராசேசன், இராச கம்பீரன், வங்கிய தீபன், புரந்தர சித்து, வங்கிய யதாகன் ஆகியவர்கள் ஒன்றன் பின் ஒருவராக அரசு புரிந்து சுந்தரேச பாத சேகரன் அரசு யெய்தினான். இவன் காலத் தில் சோழ மன்னன் பாண்டியன் படையின் சிறுமையைக் கண்டு

போர் தொடுத்தான். சோழன் புறங்காட்டினான். சோழனை துரத்தி சென்றான். சோழன் ஓர் ஆழியில் வீழ்ந்து இறந்தான். பாண்டியன் நீதி வழுவாமல் ஆண்டு தன் மகன் வரகுணபாண்டியனுக்கு அரசு ஈந்து சிவன் திருவடியை அடைந்தான். வரகுணன் இசையில் விருப்பமுள்ளவனாகையால் அவன் அரசில் பாணர்கள் நிறைந்திருந்தனர். பாணபத்திரனும் ஏமநாதனும் இசைபாடுகின்ற நியதியிலிருந்தார்கள். பாணபத்திரன் சேரன் பெருமானிடம் சென்று அங்கேயும் இசை நுணுக்கத்தையும் பரப்பி மதுரை திரும்பினான்.

## கி. மு. 305

வரகுண பாண்டியனுக்குப் பிறகு, இராசராச பாண்டியன் பரவிய மக்கட் கூட்டத்தைப் பாதுகாத்து வந்தான். அவனுக்கு காமக்கிழத்தியர்கள் பலர். பட்டத்து அரசியின் பால் சுகுணனை பெற்றெடுத்தான். வரகுணனுக்கு பன்னிரு அமைச்சர்கள் இருந்தனர். சின்னாட்களில் வரகுணனும் அரசேற்றான். சுகுணன் வழியில் 23 பாண்டியர்கள் அரசாண்டு கீர்த்திபூடணன் செங்கோலோச்சி வந்தான். ஆட்சிபுரியுங் காலத்தில் பிரளயமான கடல் கோள் நடந்தது. இதனை

கருங்கட லேழுங் காவற் கரை கடந்தாரத்துப் பொங்கி
ஒருங் கெழுந் துருத்துச் சீறியும் பரோ டிம்ப ரெட்டுப்
பொருங்கட கரியு மெட்டு பொன்னேடு கிரியு நேமிப்
பெருங்கடி வரையும் பேரப் பிரளயங் கோத்த வன்றே

திருவிளையாடற்புராணத்தில் காணலாம்

அவ்வமயம் யானைமலையும், நாகமலையும், பசுமலையும், பன்றிமலையும் திருக்கோயிலும் அழியாதன வாயின. வங்கிய சேகரப் பாண்டியன் தோன்றி சிறிய நகரத்தை ஏற்படுத்தி பாதுகாத்து வந்தான். முன்போல் நகரை அணுகி இரந்து வேண்டினன். எல்லையை ஒரு பாம்பினால் காட்ட நகரை அமைத்தான். அந்நகரை ஆலவாய் நகரம் என்று பெயரிட்டனர். அந்நகரை முன்போல் ஆக்கினபடியால் திரு ஆலவாய், மதுராபுரி என்று பெயரும் அமைந்தது. வங்கிய சேகர பாண்டியன் புதிய நகரை விருத்தி செய்து மக்கள் செல்வங்களை நிறைய வளர்த்தான். இவனுடைய காலத்தில் (275BC) வங்கக் கடலில் மரக்கலங்கள் நிறைய உலாவின. கடல் மூலமாக மற்ற நாடுகளோடு வியாபாரம் நடந்ததாக தெரிகிறது. விக்கிரம சோழன் சேகர பாண்டியனோடு போருக்கு எழுவானாயினான். பாண்டியன் சோமசுந்திரர் அருளினால் வெற்றியடைந்தான். பிறகு துரங்க வேள்விபத்தினை செய்து முடித்தான். இவன் காலத்தில் அநேக புலவர்கள் மிகவும் மேன்மையுற்றிருந்தார்கள். முக்கியமாக 48 புலவர்கள் பரவியிருந்தார்கள். புலவர்களின் அறம் நிறைந்த கல்வியை

நோக்கியும் அவைதளத்திற்கூறிய தகுதியை நோக்கியும் மங்களம் மிக்க திருக் கோயிலின் வடகுடபுலத்தின் பக்கத்தில் ஓர் சங்க மண்டபம் உண்டாக்கி அப்புலவர்களை இருத்தினன். அச்சங்க மண்டபத்தில் புலவர்கள் வாதம் செய்வதுண்டு. அந்நாட்டு புலவர் களும் வேற்று நாட்டு புலவர்களும் 48 புலவர்களோடு வாதம் செய்வதுண்டு. முடிவில்லாத புலமையைச் சீர்தூக்கி அளக் குங் கருவியாக சோமசுந்திர சித்தரை வேண்ட சங்கப் பலகையைப் பெற்றனர். அச்சித்தரே தமிழ் பாக்களை முறை முறையாகக் கற்போர்க்கு அறிவு விளங்கத் தொடுத்து வாழ்வாராயினர். அவ்வள வில் வங்கியசேகரப் பாண்டியன் சிவ நிழலடைய வங்கிய சூடாமணி முடி சூடினன்.

வங்கிய சூடாமணி திருநந்தவனம் வைத்தலாகிய திருப்பணி மேற்கொண்டான் அதனால், சண்பக மாறன் என்றப் பெயரெய்தி னன். அவ்வரசன் சங்கத்தில் நக்கீரன் முதன்மைப் பெற்றி ருந்தான். சோமசுந்திர சித்தருக்கும் தமிழ் பாடலைக் குறித்து வாதம் நடந்தது. இதன் வரலாற்றை "தருமிக்கு பொற்கிழி கொடுத்த படலத்தில்'' காணலாம். சித்தர் யோக வன்மையால் நற் றமிழனாகிய நக்கீரனை வென்றார். சித்தரைப் பழித்தலால் நக்கீரன் துன்பத்திற்கு ஆளானன். பிறகு சைவத்தை கடைப்பிடித்து கைலை வாசனை நெஞ்சுருகப் போற்றியதும் துன்பம் நீங்கினன். அன்றியும் பொதிய மலையில் வாழ்ந்த அகத்தியரை சோம சுந்திர சித்தர் வரவழைக்க நல் தமிழ் அகத்தியனும் மதுரையை அடைந்தார். சித்தர் ஆக்கினைப்படி சிலகாலம் மதுரை தங்கி தமிழ் இலக்க ணத்தை விளக்கினர். பிறகு பொதிகையை அடைந்தார். சின்னாட் களுக்கெல்லாம் சங்கப் புலவர்களுக்குள் கலகம் ஏற்பட்டது. ஒரு வணிகளின் பாராட்டுதலால் புலவர்கள் பகையை விடுத்து நண்பரா யினர். அப்புலவர்களில் நக்கீரன், கபிலன், பரணன் ஆகியவர்கள் அறிவின் மிக்க அளவளாவுதலைச் செய்து விளங்கி இருந்தனர்.

சண்பக மாறன் சிவபதம் சேர, ஒன்றன் பின் ஒருவராய் 15 பாண்டியர்கள் தோன்றி குல சேன் பாண்டியன் அரசாண்டான். இவன் தமிழின் இலக்கியமும் இலக்கணமும் கண்டவன். முத்தமி ழோர் பயில சங்கம் ஏற இடம் பெற்றவன். குலசேகர பாண்டியன் சங்கத்தில் கபிலனிடத்து கற்றுணர்ந்த இடைக்காட்டு புலவன் தானியற்றிய உரையமைந்த செய்யுளைப் படித்தனன். பொறுமை யால் மகிழ்ச்சியோ, அகமகிழ்ச்சியோ அச்சங்கத்தில் ஏற்படாமல் போகவே தன்மனம் புறம் தள்ள இடைக்காடர் சங்கத்தை விட்டு வெளியேறி சுந்தரர் முன் முறையிட்டார். சுந்தரர் அருளால் இடைக்காடர் பிணக்கு தீர்ந்தது. குலசேகர பாண்டியன் தன் மகன் அரிமருத்தன பாண்டியனுச்கு அரசு அளித்தான்.

(தொடரும்)

# தமிழ்நாடு, நாட்டு மருந்து உற்பத்தியாளர் சங்கம்

பாரதப் பிரதமருக்கு மகஜர்

இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்களுக்கு தமிழ்நாடு (சென்னை ராஜ்யம்) ஆயுர்வேத சித்த, மருந்து தயாரிப்பாளர்கள் சங்க செயலாளர் அனுப்பியுள்ள 25—7—66 தேதியிட்ட மகஜரின் தமிழ் மொழிபெயர்ப்பு பின்வருமாறு.

**விஷயம்** :—மருந்துகள் மற்றும் வாசனைப் பொருள்கள் (திருத்த) விதிகள், 1966-ஆட்சேபனைகள் மற்றும் யோசனைகள்—சமர்ப்பணம்.

தமிழ்நாடு ஆயுர்வேத மற்றும் சித்த மருந்துகள் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பாக மருந்துகள் மற்றும் வாசனைப் பொருள்கள் திருத்த விதிகள் 1966-க்கான நகல் விதிகளுக்கு, (Draft Rules) நான் கீழ்க்கண்ட எனது ஆட்சேபனைகளையும், யோசனைகளையும் சமர்ப்பிக்கிறேன்.

1. மருத்துவ சாஸ்திரத்தில் ஆயுர்வேத முறைக்கு அநேக அம்சங்களில் மாறுபட்ட ஒரு சுதந்திரமான வைத்திய முறை சித்த மருத்துவ முறையாகும். அரசாங்க வட்டத்தில் இந்த (சித்த மருத்துவ முறைக்கு) சுயேட்சையான ஒரு கவுன்சில் இல்லை. சித்த வைத்தியம் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கவனிப்பதற்கு புகழ்பெற்ற சித்தவைத்தியர்களைக் கொண்ட ஒரு சுயேட்சையான கவுன்சில் அரசாங்கத்தாரால் அமைக்கப்படவேண்டும். சித்த மருத்துவ முறை ஆயுர்வேத முறையுடன் இணைக்கப்படக்கூடாது என்று யோசனை கூறுகிறோம். சித்த மருத்துவத்தை அரசாங்க அறிக்கைகளில் எப்பொழுதும் "சித்தா உள்பட ஆயுர்வேதம்" என்று குறிப்பிடப்பட்டு வருவதானது வேதனையளிக்கிறது.

2. கடந்த 21—12—65ல் சென்னையில் இந்திய அரசாங்கத்தின் நாட்டு மருத்துவ முறைகளைப்பற்றிய ஆலோசகர் டாக்டர் C. துவாரகநாத் அவர்களிடம் ஏற்கனவே எங்களுடைய ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்திருக்கிறோம். எங்களுடைய நியாயமான முறையீடுகள்பற்றி தகுந்த பரிசீலனை செய்யப்படவில்லை என்று தெரிகிறது.

3. அரசாங்கத்திடமோ அல்லது மருந்து தயாரிப்பாளர்களிடமோ சித்த மருந்துகளை சோதனை செய்வதற்கான பிரத்யேக ஆய்வுக்கூடங்கள் (Laboratories) இல்லை. எனவே லேபிள்களில், மருந்துகளில் கலந்துள்ள பொருள்களின் எடை, அளவு அல்லது எண்ணிக்கை முதலியவைகளை குறிப்பிட இயலாது. சித்த மருந்து

களில் கலந்துள்ள பொருள்களைப் பகுத்து அறிய (Analyse) தகுதி வாய்ந்த ஆய்வுக்கூடங்கள் அரசாங்கத்திடமோ அல்லது தயாரிப்பாளர்கள் வசமோ கிடையாது.

4. சித்த மருந்துகளுக்கான பிரத்தியேக பார்மகோபியா (Pharmacopoeia) இல்லை. பார்மகோபியா இல்லாத நிலைமையில் சித்த மருந்துகளைப் பிரித்து அதில் அடங்கி உள்ளவைகளைப்பற்றி குறிப்பிட இயலாமல் இருக்கிறது. யோகிகளாலும் ஞானிகளாலும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்ட சித்தவைத்திய முறையானது தொன்றுதொட்டு வாரிசு பரம்பரையாக வளர்ந்துவந்து இருக்கிறது.

5. அநேக சித்த மருந்துகள் பல்லாண்டு காலமாக வாரிசு பரம்பரையினரால் கைமுறை அனுபோக ரீதியில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் அரசாங்கத்திடமிருந்து பட்டங்களையோ அல்லது டிப்ளமாக்களையோ பெறவில்லை. ஒரு சர்வகலாசாலையாலோ அல்லது இன்ஸ்டியூட்டியினாலோ வழங்கப்பெற்ற பட்டம் (Degree) அல்லது டிப்ளமா உள்ள தகுதிவாய்ந்த தொழில் நுணுக்க சிப்பந்தியின் (Competent Technical Staff) மேற்பார்வையிலோ அல்லது அவர் சொல்லும் வழியிலோ (Direction) தான் மருந்துகள் தயாரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையானது சித்த வைத்திய மருந்துகளை மிகவும் பாதிக்கும். இதனால் அவர்களின் ஜீவாதாரமான ஒரே தொழிலும் நசித்து இந்த வைத்தியமுறையும் அழிந்துவிடும். எனவே இந்தப் பிரிவு திணிக்கப்படக்கூடாது.

6. சித்த மருத்துவத்திற்கான சரியான ஆய்வுக் கூடங்கள்.

தொழில் நுணுக்க வல்லுநர்கள் (Technical Personnel) பார்மகோபியா ஆகியவைகள் தயாராக இல்லாத நிலைமையில் மேற்கண்ட வசதிகள் எளிதில் கிடைக்கும் வரையில் சித்த வைத்திய முறையை கட்டுப்படுத்துவதற்கான எந்த சட்டத்தையும் இயற்றுவதை அரசாங்கம் ஒத்திவைக்கவேண்டும். பண்டைக்காலம் தொட்டு யோகிகளாலும் ஞானிகளாலும் கையாளப்பட்டுவந்துள்ள இந்த முறை மருந்துகளுக்கு அரசாங்கம் அமோக ஆதரவு அளிக்கவேண்டும். சித்த மருந்துகளுக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தபட்சம் ஒரு சித்த மருத்துவக் கல்லூரி துவங்கப்பெறவேண்டும். மாணவர்களுக்கு தாராளமாக கல்வி மானியம் (Scholarship) அளிக்கப்படவேண்டும். அநேக ஆய்வுக் கூடங்களும் ஆராய்ச்சி நிலையங்களும் அமைக்கப்படவேண்டும் சித்த மருந்துகள் வியாதிகளை சிறந்த முறையில் குணப்படுத்தக் கூடியனவாக இருப்பினும் ஆங்கில மருந்துகளின் விலைகளைக்காட்டிலும் மிகவும் மலிவானவை. இந்த மருத்துவ முறைக்கு சரியான அரசாங்க ஆதரவு வழங்கப்படும் பட்சத்தில் அந்நிய செலாவணியை அதிகமான அளவு சம்பாதிக்க உதவும். தேசியப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும்.

7. மருந்துகளை தயாரிப்பதற்காக கட்டிடங்களை கட்டுவதற்கு பெரிய முதலீடு செய்யும் அளவிற்கு பெரிய தொழிலதிபர்களாகவோ செல்வந்தர்களாகவோ சித்தவைத்தியர்கள் இல்லை. அவர்கள் குறைந்த வருமானத்துடன் குடிசைகளில் வாழ்கின்றனர். குறைந்த விலையில் சிறந்த மருந்துகளைத் தயாரித்து சமுதாயத்திற்கு சேவை செய்துவருகின்றனர். ஏறத்தாழ இது ஒரு குடிசைத் தொழிலாகும். சிறிய அளவு தொழில்களுக்கு அரசாங்கம் அளித்துவரும் ஆதரவைப்போல் இந்த மருத்துவமுறைக்கும் ஊக்கம் அளிக்கவேண்டும். எனவே மருந்து தயாரிக்கும் இடங்கள் சம்பந்தமாக குறிப்பிட்ட நிபந்தனைகள் எதுவும் விதிக்கப்படக் கூடாது.

8. லைசென்ஸ் வழங்குவதற்கான அதிகாரி சம்பந்தமாக சித்த மருந்துகளுக்காக தனிப்பட்ட கவுன்சிலும், ஆங்கில வைத்தியத்துடன் எந்த வகையிலும் தொடர்பு இல்லாத நாட்டு மருந்துகளில் பட்டம் பெற்ற ஒரு தனி மெடிக்கல் சர்வீஸ் டைரக்டரும் நியமிக்கப்படவேண்டும். சுயேட்சையான கருத்துக்கொண்ட ஒரு குழு தான் சித்தமருந்து தயாரிப்பதற்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் படைத்ததாக இருக்கவேண்டும். ஏனென்றால் ஆங்கில வைத்தியமுறை வர்க்கத்தினர்களிடையே சித்த வைத்தியர்கள் குறித்து ஒரு தவறான கருத்து பொதுவாக இருந்துவருகிறது. இப்பொழுதுள்ள அதிகாரிகளுக்கே ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நாட்டு மருந்துகள்பற்றி பயிற்சி அளித்து லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் அவர்களிடம் ஒப்படைக்கப்படும். பட்சத்தில் அவர்கள் இயற்கையாகவே இந்த முறைக்கு அனுதாபம் உடையவர்களாக இருக்கமாட்டார்கள்.

சுருங்கக் கூறின் லைசென்ஸ் வழங்கும் முறையையே நாங்கள் எதிர்க்கிறோம். சித்தவைத்தியமுறை வளம்பெறவேண்டும் என்ற உண்மையான ஆசை அரசாங்கத்திற்கு இருக்கும்பட்சத்தில் சித்தா கவுன்சில் நிறுவப்பட்டபின் அதன் பொறுப்பில் இந்த லைசென்ஸ் வழங்கும் பிரச்னைபற்றி முடிவு செய்வதற்கு விட்டுவிடவேண்டும். ஏனென்றால் சித்த வைத்தியர்களின் நிலைமையை அறிந்து அந்த கவுன்சில்தான் ஒரு முடிவு செய்ய இயலும். அந்த கவுன்சிலால் தான் சித்த வைத்தியர்களின் தொழில் நிலைமையை அறிந்து அவர்களின் தொழில் வளர்ச்சிக்கு உதவ முடியும். மற்றவர்கள் பிரமாதமாக செய்வதாக சொல்வார்கள். ஆனால் இத்தொழிலுக்கு உதவக் கூடிய எதையும் செய்யாமல் அதன் அழிவிற்கு வழி வகுப்பார்கள் என்பதே எங்கள் கருத்தாகும்.

9. லைசென்ஸ்களை சஸ்பெண்ட் அல்லது கான்சல் செய்யும் அதிகாரம் படைத்த அதிகாரிகள் சுயேட்சையான சித்தா கவுன்சிலால் நியமிக்கப்படாதவர்களாக இருந்தால் அம்மாதிரி அதிகாரிகளால் அமுல் நடத்தப்படும் சட்டம் ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்காது. யதேட்சாதிகாரிகள் உள்ள நாடுகளில்தான் அவ்

விதம் காணப்படும். அப்பீலில் அரசாங்க உத்தரவுகளே முடிவான தாகும் என்று குறிப்பிடும் பிரிவு ஜனநாயகத்திற்கு விரோதமாக இருக்கிறது. பரிகாரம் காணுவதற்காக கோர்ட்டுக்கு செல்லும் வசதி இருக்கவேண்டும்.

10. சுயேட்சையான சித்தா கவுன்சிலால் நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர்களே மூலப்பொருள்களை (Raw materials) பார்வை யிடவேண்டும்.

11. ஆங்கில மருந்துகளின் லேபிள்களில் மருந்துகளில் கலந் துள்ள பொருட்களின் விபரம் குறிப்பிடப்படுகின்றன. இந்த விபரங்களில் மூலப் பொருள்கள் இடம் பெறுவதில்லை. வைட்ட மின்களும் சத்து மதிப்புகளும் (Vitamins and nutritious values) தெரிவிக்கப்படுகின்றன. நோயாளிகளுக்கு மருந்துசீட்டு கொடுப் பதற்கு டாக்டர்களுக்கு வழிகாட்டியாக பயன்படுகிறது. இந்த லேபிளால் மருந்து உபயோகிப்பவர்களுக்கு எந்தவித பயனும் இல்லை. மருந்துகளில் கலந்துள்ளவைகள் பற்றி டாக்டர் தெரிந்து நோயாளிகளுக்கு சிபார்சு செய்வதற்கு இது உபயோகமாகிறது. டாக்டர்கள் சித்த மருந்துகளை நோயாளிகளுக்கு சிபார்சு செய்வ தில்லை. எனவே லேபிள்களில் மருந்துகளில் கலந்துள்ளவைகள் பற்றி குறிப்பிடுவது சாத்தியமுமில்லை, பிரயோஜனமும் இல்லை. சித்த மருந்து தயாரிப்பவர்களிடையே வேண்டாத ஒரு போட்டியை தோற்றுவிப்பதற்கே இந்த லேபிள்களில் குறிப்பிடும் விபரங்கள் உதவும். சில சமூக விரோத சக்திகளுக்கு போலி மருந்துகள் தயாரிக்கத் தூண்டும், அவைகளால் பொது சுகாதாரம் பாதிக்கப் படும்.

13. சித்த மருந்துகளில் சாதாரணமாக பல்வேறு பாஷாண வஸ்துக்கள் சேர்க்கப்படுகின்றன. ஆனால் சில பக்குவங்கள் (Process) மூலம் பாஷாணத் தன்மையை நீக்கி மருந்துகளில் சேர்க் கப்படுகின்றன. லேபிளில் மருந்து சாப்பிடவேண்டிய அளவை குறிப்பிடலாம். முழுவதும் பாஷாணமாக உள்ள மருந்து லேபிள் களில் "விஷம்" (Poison) என்று குறிப்பிடுவதற்கு எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.

14. விதிகளின்படி சித்த மருந்துகளை சோதிக்கவும் பிரித்துப் பார்க்கவும் கல்கத்தாவிலுள்ள மத்திய மருந்துகள் ஆய்வுக்கூடமும் ராஜ்யங்களிலுள்ள மருந்து சோதனை ஆய்வுக் கூடங்களும் அதி காரம் அளிக்கப்பட்டிருக்கின்றன. சுயேட்சையான சித்தா கவுன்சி லால் சித்த மருந்துகளுக்கென ஏற்படுத்தப்படும் ஆய்வுக்கூடங்கள் மட்டுமே சித்த மருந்துகளை பிரித்துப் பார்க்கவும் சோதனை செய்ய வும் அதிகாரம் பெறவேண்டும். அதுமட்டுமே தயாரிப்பாளர்களை கட்டுப்படுத்தவேண்டும்.

15. தற்போது அமுலில் உள்ள பார்மகோபியாவில் சில சோதனைகள் குறிப்பிடப்படாமல் இருக்கும் மருந்துகள் விஷயத்

தில் 162-வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது. அரசாங்க ஆய்வாளர் அம்மாதிரி மருந்துகள் விஷயத்தில் விஞ்ஞான ரீதியாக தனக்கு தோன்றுகிறபடி, சில சோதனைகள் நடத்தி லேபிளில் குறிப்பிட்டுள்ளபடி மூலப் பொருள்கள் அதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பரிசிலனை செய்து முடிவுசெய்யலாம். இந்தப் பிரிவு நியாயமானதாகவோ ஜனநாயகமானதாகவும் இருக்கவில்லை. சித்த மருந்துகளுக்கென பார்மகோபியா இருந்தால்தான் இந்தப் பிரிவு அமுல் நடத்த முடியும்.

16. சித்த மருந்துகளுக்காக ஒரு தனி கவுன்சில் அமைக்கும்படி கூறி பலதடவைகளில் அரசாங்கத்திடம் முறையிட்டிருக்கிறோம். எங்கள் நியாயமான கோரிக்கைக்கு நமது தேசிய அரசாங்கம் இந்த காலம் தாழ்ந்த நேரத்திலாவது செவிசாய்க்கும் என்று நம்புகிறோம்.

17. சுருக்கமாகக் கூறினால் நமது விண்ணப்பங்கள் 6 ஆகும்.

(அ) சித்த மருந்துகளுக்காக சுயேட்சையான கவுன்சில் அமைக்கவேண்டும்.

(ஆ) சித்த மருந்துகளுக்குத் தனியாக பார்மோகோபியா வேண்டும்.

(இ) தமிழகத்தை தலைமை ஸ்தானமாகக் கொண்ட ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கப்படவேண்டும். ஏனெனில் சித்தவைத்தியத்தின் பிறப்பிடம் தமிழகமே.

(ஈ) ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒரு சித்த மருத்துவக் கல்லூரி கட்டப்படவேண்டும்.

(உ) எல்லா சாதனங்களுடன் கூடிய அனலைசிங் லாபரேட்டரிகள் அமைக்கப்படவேண்டும்.

(ஊ) சித்த வைத்தியத்தைக் குடிசைத் தொழிலாக அறிவித்து சிறு கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் உதவிகள் அத்தனையும் அளிக்கப்படவேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ளவைகள் பற்றி அனுதாபத்துடன் கவனிப்பீர்கள் என்று நம்புகிறோம். எங்களுடைய மேற்கண்ட யோசனைகள்படி நிலைமைகள் சீரடையும்வரை உத்தேச சட்டம் ஒத்திவைக்கப்படவேண்டும். சுயேட்சையான சித்தா கவுன்சில் ஏற்பட்டபின் சித்தவைத்தியர்களைக் கலந்தே எந்த நடவடிக்கையும் எடுக்கவேண்டும் என்றும், அவசரப்பட்டு எடுக்கப்படும் நடவடிக்கைகளால் இந்தத் தொழிலின் அழிவுக்குத்தான் வழிவகுக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனித சமுதாயத்திற்கும் பயன்படும் இந்த மருத்துவமுறையின் வளர்ச்சிக்குத் தாங்கள் முடிந்த அளவு உதவுவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

# உரைகல்

(கவிஞர் திருச்சி வாசுதேவன்)

தோற்றத்தில் ஒற்றுமையுள்ள பல பொருள்கள் தன்மையிலே வேற்றுமை யுடையனவாகக் காணப்படுகின்றன. அதேபோல் பண்பிலே ஒற்றுமையுள்ளவை தோற்றத்திலே வேற்றுமையுடையனவாகக் காணப்பெறும். இத்தகைய ஒற்றுமை வேற்றுமைப் பண்புகளை அந்தந்தப் பொருள்களுக்கேற்பப் பற்பல முறைகளைக் கையாண்டு தெளிவாகத் தெரிந்துணர்கிறோம்.

உதாரணமாக வெள்ளி, பித்தளை, செம்பு போன்ற உலோகங்களில் செய்த அணிகலன்களில் பொன் முலாம் பூசப் பெற்றிருக்குமேயானால், அவை காண்பதற்குப் பொன்னால் செய்த அணிகளைப் போன்றே தோற்றும். அதே போலப் பொன்னால் செய்த அணிகளும் சில சமயங்களில் பொலிவிழந்து காணப்பெறும்.

ஆகையால் தோற்றமென்னும் திரைக்குள் ஒளிந்திருக்கும் உண்மையான உலோகத்தை இன்னதுதான் என்று பெரும்பாலும் உறுதியாய்க் கூற இயலாது. எனவே அணிகள் பார்வைக்கு மின்னிக்கொண்டிருப்பினும், ஒளி மங்கியிருப்பினும் அவற்றை உரைத்துப் பார்த்து உண்மையான உலோகத்தை உணர்ந்து கொள்வர். அதற்கு உதவியாய் இருப்பது உரைகல்லாகும்.

அணிமணிகளைப்போலவே மனிதர்களுள்ளும் பெருந்தன்மை யுடையவர்களும், சிறுமதி படைத்தவர்களும் இருக்கிறார்கள் அன்றோ? அவர்களுடைய உண்மையான குணங்களை நாம் எப்படித் தெரிந்துகொள்வது? பார்ப்பதற்கு மிகவும் ஆடம்பரமாகவும், செல்வந்தனைப் போலவும் தன்னை ஒருவன் காட்டிக்கொள்வதைக் கொண்டே அவன் பெருமையுடையவன் என்று தீர்மானித்துவிட முடியாது. அவ்வாறே சிறிதும் ஆடம்பரமின்றி எளிமையாகத் தோன்றும் ஒருவனைச் சிறுமையுள்ளவன் எனவும் கூற இயலாது.

பின் எப்படித்தான் ஒருவருடைய உண்மையான தன்மையை நாம் உணர்வது? இந்தக் கேள்விக்குத் திருவள்ளுவர் என்ன பதில் அளிக்கிறார் பாருங்கள் :

> "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்"

ஒவ்வொருவரும் செய்யும் செயலே அவரவருடைய பெருமை அல்லது சிறுமையை எடுத்துக்காட்டும் உரைகல்லாகும் என்பது இக் குறளின் கருத்து.

பொது மக்களுக்குத் தொண்டு புரிவதற்காகப் பதவியில் அமர்ந்துகொள்ள மக்களின் வாக்குரிமைகளைக் கேட்கும் அரசியல் வாதி அங்கத்தினர்களின் நல உரிமைகளுக்குப் போராடுவதற்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட சங்கத் தலைவர் இடிந்த கோயிலைப் புதுப்

பித்துத் திருப்பணி புரிய நன்கொடை வாங்கிய அடியவர்க்கடியார் இன்னும் இவர்களைப்போல் பொதுத் தொண்டு புரிய முன் வருவோரின் உண்மையுள்ளத்தை நாம் எப்படி அறிவது?

பிறகு அவரவர்கள் செய்யும் நல்ல செயல்களைக்கொண்டு பெருமைப்படுத்தவேண்டும்; அல்லது செய்யும் தீய காரியங்களைக் கொண்டு சிறுமை யுடையவர்களாகக் கருதவேண்டும்.

ஆகவேதான் வெற்றுரைகளைக்கொண்டும், வெளித் தோற்றத்தைக் கண்டும் ஒருவருடைய உயர்வு அல்லது தாழ்வை மதிப்பிடுதல் கூடாது. அன்னவரின் செயல்களைக்கொண்டே மதிப்பிடுதல் வேண்டும் என்று வள்ளுவர் அழகுபெற அறவுரை கூறுகின்றார் நமக்கு.

சொல்லுக்கும் செயலுக்கும் சொப்பனத்தில்கூட ஒற்றுமையின்றி வாழ்வோர் நிறைந்திருக்கும் இவ்வுலகில், வள்ளுவர் கூறிய இந்தக் கருத்துப்படி ஒவ்வொருவரும் நல்லவர்களைத் தெரிந்து அவர்களுடன் நட்புப் பூணுவதே இன்றியமையாததாகும்.

வயதிலே சிறியவரானாலும் ஒருவர் நாட்டிற்கும் மக்களுக்கும் நல்ல செயல்கள் புரிந்திருப்பாரேயானால் அவரைப் போற்றிப் புகழ எவரும் தயங்கார். ஆனால் ஒருவரிடம் படிப்பு, பணம், அறிவு ஆகிய எல்லா நலங்களும் நிறைந்திருந்தும் அவர் நாட்டிற்கும் குறிப்பாகச் சமுதாயத்திற்கும் எந்தவிதமான தன்மையும் செய்யவில்லையென்றால் அவரைப் போற்ற யாருக்கு மனம் வரும்?

ஆகையால் ஒருவருடைய செயல்களைப்பற்றி நாம் அறிந்து கொள்ளாமல் அவரை அளவுக்கு மீறிப் பெருமைப் படுத்துவதோ அல்லது சிறுமைப்படுத்துவதோ கூடாத செயலாகும். இந்த நீதியை ஒரு சாராருக்கு மட்டுமல்லாமல், மக்கள் குலம் முழுமைக்குமே பொருந்துவதாகப் புகட்டியுள்ளார் வள்ளுவர்.

அதன்படி, மற்றவர்களுக்கு நலம் பயக்கும் நற்செயல்களைப் புரிந்து உயர்வு பெறுவோமாக.

---

**இரத்த அழுத்தத்திற்கு (FOR BLOOD PRESSURE)**

பலரால் புகழ்ப்பெற்றதும், பலநற்சான்றுகள் பெற்றதுமான எமது (சிவப்பிரகாசக் குழம்பு) இரத்த அழுத்தத்தால் உண்டாகும், உடல் அதிர்ச்சி, மயக்கம, கண்மங்கல், களைப்பு, மேல மூச்சு வாங்குதல் போன்றவைகளை நீக்கி இராஜகருவிகளாகிய இருதயம், ஈரல், மண்ணீரல், இரைப்பை முதலியவைகளை வலுப்படுத்தி திடீர் மரணம் ஏற்படாமல் நிரந்தர இரத்த அழுத்தத்தை தடுக்க வல்லது. உபயோகிக்கும முறை மருந்துடன் அனுப்பப்படும்

250 கிராம் ரூ.15. 30 நாள் மருந்து.

M. திருவேங்கிடம் R.I.M.P. 53 யூனிசலி சாயபு தெரு, மவுண்ட்ரோட் P.O. சென்னை-2.

# தசவாயுக்கள்

(சித்த வைத்தியர் அ. மாணிக்கவாசகம், சென்னை.)

வாயு இல்லாமல் மக்களும் மற்ற உயிர் வகைகளும் வாழ முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். ஆனால் அவை எத்தனை வகைப்படும். அவை எங்கெந்த காரியங்களை செய்ய உதவுகிறது என்பதைப்பற்றி சிந்திப்போம். வாயுக்கள் பத்து வகைப்படும் அவை (1) பிராணன், (2) அபானன், (3) சமானன், (4) உதானன், (5) வியானன், (6) நாகன், (7) கூர்மன், (8) கிருகரன், (9) தேவதத்தன், (10) தனஞ்சயன் என்பனவாம்.

1. பிராணன்:—இது இருதயத்தினின்றும் இயங்குகிறது. இது வெளியிலிருந்து உள்ளுக்குச் செல்லுங்கால் 12 அங்குலம் நீளமுள்ளதாகவும் இருதயத்தில் கலந்த பிறகு வெளியில் தள்ளப் படுங்காலத்தில் 8 அங்குலமாகி தன் நிலைமையினின்றும் மாறாமல் வெளியாகிறது. உயிரை இயங்க வைக்கவும் தேகத்தின் வெப்பத்தை ஒரே நிலையில் அமைக்கவும் இந்த வாய்வு பயன்படுகிறது. உயிருடன் இருக்க இந்த வாயுவல்லாமல் மற்றவைகளால் ஒன்றும் செய்ய முடியாமையால் இதற்கு பிராணவாயு எனப் பெயர் உண்டாயிற்று.

2. அபானன்:—இந்த வாயுவானது உந்திக் கமலத்தின் அடியில் உற்பத்தியாகி மல சலம் முதலானக் கழிவுப் பொருள்களை வெளியில் தள்ள உதவுகிறது.

3. சமானன்:—இது கந்தாக் குழியில் கந்திடை நின்று உணவு முதலானவைகளை சீரணம் செய்ய சரிப்படுத்துவதுடன் விக்கல், கக்கல் முதலியவைகளையும் செய்கிறது.

4. உதானன்:—இது உந்தியில் உற்பத்தியாகி தான் உட்கொள்ளும் உணவுப் பொருள்களை சரியானபடி சீரணம் செய்ய உதவுகிறது.

5. வியானன்:—இது சரீர முழுவதும் வியாபித்து இருப்பதுடன் உட்கொண்ட உணவுப் பொருள்களின் சக்தி தேக முழுவதும் பரவச் செய்கிறது.

6. நாகன்:—தேகத்தில் உள்ள உறுப்புகளை நீட்டல், முடக்கல், இணக்கல் முதலியவைகளைச் செய்கிறது.

7. கூர்மன்:—இது உரோமங்களை புளகிப்பதற்கும் கண், விழி இவைகளை சிமிட்டுவதற்கும், அசைப்பதற்கும் கண்ணினின்றும் நீரைப் பெருக்குவதற்கும் உதவுகிறது.

8. கிருகரன்:—இது முகத்தினில் உற்பத்தியாகி தும்மல், ஆயாசம், சோம்பல், கோடம் முதலியவைகளை உண்டாக்குகிறது.

9. தேவதத்தன்:—இது இரைப்பு வியர்த்தல் முதலியவை செய்கிறது.

10. தனஞ்சயன்:—இந்த வாயு மற்ற வாயுகளுக்கெல்லாம் அதிகாரியாகி உச்சியிலேறி வதைக்கவும் துடிக்கவும் செய்யும். மற்ற நாடிகளெல்லாம் இயங்கும் தன்மை இல்லாத காலத்தும் (உயிர் உடலைவிட்டு நீங்கியபிறகும்) உடலில் இருந்துகொண்டு உடலை வீங்கவைத்தல் முதலிய காரியங்களை செய்கிறது.

# நோயாளியின் பரிசோதனை

(டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.)
(பாளையங்கோட்டை, அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி முதல்வர்)

## நோயாளியின் தோற்ற நிலை

(முன் தொடர்ச்சி)

(6) நாக்கை பரிசோதனை செய்தபிறகு வாயின் உட்பாகமாகிய உட்தாடைகளை கவனித்தல்வேண்டும் விளையாட்டு அம்மை நோயில் தாடையில் நீல நிறம் கலந்த வெண்மையாகிய புள்ளிகள்போன்ற பருக்கள் காணும்.

(7) மைனாவாய் மைனா பறவையின் வாயின் இரு கோணங்களில் வெண்மையான உறுப்பு அடையாளம் இருப்பதுபோல் தாடை நோயில் இரு உதடு சேரும் கோணத்தில் வெண்மையான பக்கு காணும். சில வேளை பால் ஏடையைப்போல் தோன்றும். பால் ஏடையாய் இருந்தால் அகற்றினால் ஒன்றுமிராது. பக்காக இருந்து அகற்றினால் வலியோடு சிறிது இரத்தம் கசியும்.

(8) தொண்டை—தொண்டை நெறி கோளங்கள் (Tonsils) உப்பி இருக்கின்றனவா? தாபித மடைந்திருக்கிறதா? அல்லது அதில் சீழ் பிடித்திருக்கிறதா? என்பதை எல்லாம் கவனிக்கவும். சில சமயங்களில் உமிழ் நீர் கோளங்கள் உப்பி கனத்து காணும். அவைகளையும் கவனிக்கவும். வாயின் அண்ணத்தை கவனிக்கவும். புண்கள் வன் அண்ணத்தில் தென்படும். அவைகள் கொருக்கு நோயினை குறிக்கும். பிறகு மென் அண்ணத்தை கவனிக்கவும். உள்நாக்கு வளர்ந்திருக்கிறதா? அதன் நிறம், புண்கள் காண்கின்றனவா? என்று கவனிக்கவேண்டும். எப்பொழுதும் தொண்டையை பஞ்சினால் துடைத்து பார்க்கவேண்டும். பிறகு தொண்டையினை பரிசோதிப்பதில் அநேக நன்மைகளை பயக்கும்.

**வாய் நாற்றம்:**—தொண்டை நெறி கோளத்தில் சீழ் பிடித்திருந்தாலும் ஈறு வீங்கி சீழ் பிடித்திருந்தாலும், சொத்தைப் பற்களிருந்தாலும் வாய் நாற்றம் உண்டாகும். முக்கியமாக, தொண்டை நெறி கோளத்தின் கோளாறினால்தான் வாய் நாற்றம் காண்பதுண்டு.

நுரையீரல் நெடு நாட்களாக நோய்வாய்பட்ட காரணத்தாலும் வாய் நாற்றம் காணும். உளை மாந்த நோயிலும் காணும். உணவு செறிப்பு உறுப்பின் தாபிதத்தாலும் வாய் நாற்றம் உண்டு.

கப நீர் சோவை மரணக்குறி காலத்திலும் ஒருவித உப்பு நாற்றம் (Amoniac) அடிக்கும். நீரிழிவு நோயின் முடிவுகாலத்தில்

பன்ங்கள் நாற்றம் நாறும். சில பாடான மருந்துகள் உட்கொள்ளும்போது மருந்துக்கேற்ற நாற்றங்கள் புலப்படும்.

**இரைகுழல் (Oesaphagus)** உணவு விழுங்க முடியாமைக்கு காரணம் காண இவ்வுறுப்பினை பரிசோதிக்கவேண்டும்.

1. கொஞ்சம் தண்ணீரை நோயாளனுக்கு கொடுத்து பார்க்க தண்ணீர் குறல் வளையை விட்டுச்சென்று அதற்குமேல் உட்செல்லாமல் தண்ணீர் அவ்விடத்தே நின்றுகொண்டு விழுங்க முடியாமல் போகும். மேற்சொன்ன உறுப்பின் பாதையில் ஏதோ ஒரு வளர்ச்சி ஏற்பட்டு உட்செல்லும் தண்ணீரையே உணவையோ உட்செல்லாமல் தடுக்கும். அந்நோய் சாதாரணமாக புற்று நோயாக இருக்கக்கூடும்.

2. கடினமான உணவுப் பொருளை உட்கொண்டால் பற்களால் மென்று குறல்வளைக்குமேல் சென்று அதற்குமேல் இறைப்பைக்கு போக முடியாமல் மார்பில் ஓர்வித அடைப்பு உணர்ச்சி தோன்றும். மூச்சு திணறும், இதுவும் புற்று நோயில் காணும். ஆரம்ப நிலையில் அவ்வுறுப்பின் புற்று நோய் காலத்தில் உணவை விழுங்க மிகவும் கஷ்டம் இருக்கும்.

3. தொண்டை நெறி கோளங்கள் இருபக்கமும் தாபிதத்தால் உப்பினாலும் வீங்கிக்கொண்டாலும், உமிழ்நீர் கோளங்கள் தாபிதமடைந்தாலும் உணவு விழுங்க கஷ்டம் ஏற்படும். இவைகளை எல்லாம் தீர பரிசோதிக்கவேண்டும்.

**தொந்தியின் அமைப்பு** :—தொந்தியின் மேல்பரப்பை கூர்ந்து கவனித்தால் சில கோடுகள் தெரியும் (1) (நடுவரி, நடுமையக் கோடு); (2) அறைவட்டக் கோடுகள்; (3) குறுக்குக் கோடுகள் காணப்படும்.

நடுமையக் கோட்டிற்கு நேராக தொந்தியினுள் இருக்கும்படியான உறுப்புக்கள் மேலிருந்து கீழ் :—(1) கல்லீரலின் இட இதழ் (2) இரைப்பையின் சிறுபாகம் (—உணவில்லாமல் காலியாக இருக்கும்பொழுது); (3) பெருங்குடல் குறுக்குபங்கு; (4) சிறுகுடல் சுருள்கள்; (5) சலப்பை—சிறுநீர் நிறைந்திருக்கிறபொழுது); (6) கருப்பை—பெண்கள் சூலுண்ட காலத்தில்.

அறைவட்டக் கோடுகள் நடுமையக் கோட்டிற்கு இரண்டு பக்கமும் தசையை பொருந்தியுள்ளது.

குறுக்குக் கோடுகள் நடுவட்டமையக் கோட்டிலிருந்து அறைவட்டக் கோட்டிற்கும் இடையேயுள்ளவை.

தொந்தியிலுள்ள உறுப்புக்களை விவரிப்பதற்கும் இதனில் உண்டாகும் நோய்களுக்கு இடங் குறிப்பதற்கும் வசதியாக தொந்தியறையைப் பங்குகளாகப் பிரிப்பது வழக்கம். ஒன்பதாம் விலா முருந்தின் மட்டத்தில் ஒன்றும் ஒக்கலைப் புருவத்தின் அதிக உயர்ந்த முனை மட்டத்தில் ஒன்றுமாகச் சரீரத்தை இரண்டு நூலாற் சுற்றினால் உதரவறைமேல், நடு, கீழ் என மூன்று அணிகளாகப் பிரியும். இரண்டு பக்கத்திலும் ஒன்பதாம் பழுமுருந்திலிருந்து வஞ்சணத்தினத்தின் மையத்துக்கு வர இன்னும் இரண்டு நூல் பிடித்தால் ஒவ்வொரு அணியும் மும்மூன்று கோடுகளாகப் பிரியும். அவைகளை கீழ்வருமாறு காண்பிக்கப்பட்டிருக்கிறது.

### வலது பிசண்டம்

1. ஈரலின் வல இதழ் ; பித்துப் பை; பசதக் குடல்; பெருங் குடலின் வலது மடிப்பு ; வலது பிருங்கத்தின் மேற் பகுதி ; வலது பிருக்கோபரி ;

### மேல் வயிறு

இரைப் பையின் நடுவும், வல அந்தமும் ; ஈரலின் இட இதழ் ; கணையம்.

### இடதுபிசண்டம்

இரைப் பையின் இட அந்தம் ; பிளிகை ; கணயத்தின் சிற்றந்தம் ; பெருங் குடலின் இடது மடிப்பு ; இடது பிருக்கத்தின் மேலரைவாசி; இடது பிருக்கோபரி.

### வலது சல்லை

பெருங்குடலின் ஏறு பங்கு ; வலது பிருக்கத்தின் கீழ் பங்கு; சிறு குடல்களின் சில சுருள்கள்.

பெருங் குடலின் குறுக்குப் பங்கு ; பசதக் குடலின் குறுக்குப் பங்கு ; சூனிகத்தினதும்; இலியத்தினதும் சில சுருள்கள்.

### நாபியயல்

பெருங் குடவின் குறுக்குப் பங்கு ; பசதக் குடலின் குறுக்குப் பங்கு; சூனிகத்தினதும் இலியத்தினதும் சில சுருள்கள்.

### இடதுசல்லை

பெருங் குடலின் இறங்கும் பங்கு இடது பிருகத்தின் கீழ் பாகம்; சிறு குடலின் சில சுருள்கள்.

### வலது வஞ்சணம்

அந்தகை ; நாங்கூழ் மேகதி ; பீச தசிரங்கள்

### கீழ் வயிறு

சிறுகுடலின் சில சுருள்கள் ; சலப்பை ; கருப்பிணியிற் கருப்பை

### இடது வஞ்சணம்

லகரம் ; மேகதி ; பீததசிரங்கள். (தொடரும்

# சௌந்தரிய லகரி

## ஆனந்த லகரி

(சித்த வைத்தியர், எச். பி. முத்து கிருஷ்ணன், நெற்குப்பை)

(முன் இதழ் தொடர்ச்சி)

### தேவியின் ஸ்வரூபம் (தேவியின் திருக்காட்சி அருள்)

*மேகலை பொங்க, மதாசல கும்ப மெனு*
*முலை கண்டு இடை சோரா, நீர்*
*மாகம் வளம் கெழு நாள் நிறை அம்புலி*
*வாள் மூகம், அம்பு வில் ஏடார் போது*
*ஏக நெடுங் கழை, பாசமொடு அங்குசம்,*
*ஏர் பெற வந்து அருள், காபாலி!*
*நீ கமலம் திகழ் தாள் வருடும் அரன்*
*நீர்மையின் விஞ்சிய கோ மாதே!!*

*ஸ்ரீ ஹகபாலி என்னும் பெயரை உடைய அம்பிகையே! (கபாலத்தை உடையவளே!) உன் தாமரைத் திருவடிகளை வருடும், பரமசிவனதும் நீர்மையினும் மிக்க வடிவுடையவளே! நீ என் முன், யானையின் மத்தகமோ என நின் ஸ்தனங்களைக் கருதி, அச்சமுற்று மருங்கு (இடை) நுடங்க, அதன் மேல் கிடக்கின்ற மேகலை அசைய, நீருண்ட மேகங்கள் வளம் பொருந்துகின்ற நாட்களில், பதினன்கு கலைகளையும் உடைய சரத்கால சந்திரனைப் போன்று ஒளி பொருந்திய உன் அழகிய முகத்தோடு கூடி, இதழ்கள் பொருந்திய, பூவம்புகளும், ஒப்பெற்ற நெடிய கரும்பு வில் பாசம், அங்குசம் முதலியவைகளை உடையவளாய், காட்சியளித்து அருள்பாலிப்பாயாக!*

*மணி பூரகத்தில் தேவி எந்த ரூபத்துடன் பிரகாசிக்கிருளோ! அது இங்கே வர்ணிக்கப்படுகிறது. மணி பூரகத்தில், காமசுவரனுடைய ஜீவநாடியாக தேவி விளங்குகிருள்.*

*ஆயுதங்கள் :— ஆசை வடிவமான பாசம் இடதுகை, மேல் கையில், கோபமாகி, அங்குசம் வலது மேல்கையில், மனமாகிய கரும்புவில் இடது கீழ்க் கையில்; ஐந்து தன் மாத்திரைகளாகிய பாணங்கள் வலது கையில்: இவைகளுடன் விளங்குபவளே ஜகந் மாதா!!*

*குறிப்பு:—இச் செய்யுள் சத்ருஜயத்தை அளிக்கவல்லதாம்.*

### தேவியின் சிந்தாமணி கிருஹம்

*ஆர் அமுது இன் கடல், வேலி செழுந்தரு*
*வாய் மணி பம்பிய தீ வூடே*
*பார கடம்பு அடர் கானில், அருங் கொடை*
*பாய் மணி மண்டப வீடுடே*

கோர சிவ பரமேசன் உன் மஞ்சம், ஓர்
சூர் பரி அங்கம், எனு மேலே
சீர் அடரும் பரஞானம் உறும் களி
தேவர் அருந்துபவர் பூமாதே!

ஆயிரம் இதழையுடைய தாமரைப் பூவிலே இருக்கின்ற மாதாவே! அரிய அமுதத்தினுடைய கடல் நடுவே செழுமையுடைய, கற்பகத்தருக் கூட்டங்கள் வேலியாக அதன் நடுவே ஓர் ரத்ன (மணி) தீவு. அத்தீவின் நடுவில் பருத்த அடர்த்தியான கடம்பவனம். அதன் நடுவே, அரிய கிரணங்கள் பாய்கின்ற மணி மண்டபம் என்னும் சிந்தாமணி கிருஹம். அதன் நடுவில் பரம மங்களமான வடிவையுடைய பரமசிவன் என்னும் மஞ்சத்தில், (அம், மஞ்சத்தின் கண்) பரமசிவனது, தொடைகளின்பேரில் வீற்று, ஞானானந்தக் கடலின் அலைபோன்று செறியும் மகிழ்ச்சியை, அரிய தவத்தையுடையவர்களே அனுபவிப்பார்கள் அன்றோ!

இங்கே தேவியின் வாசஸ்தானமான "சிந்தாமணி கிருஹம்" வர்ணிக்கப்படுகின்றது.

அது சகல பிரமாண்டங்களுக்கும், அப்பால் அமிருதக் கடலில் மத்தியில் இரத்தின தீபம் உள்ளது. 25 பிரகாசங்களை உடையது. அவை வரிசையாக இரும்பு, எஃகு, செம்பு, வெள்ளீயம், பித்தளை, பஞ்சலோஹம், வெள்ளி, தங்கம், புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வைரியம், வைடூரியம், நீலம், முத்து, மரகதம், பவளம், நவரத்தினம், நாளுரத்தினம். இவற்றாலும் மனம், புத்தி, அகங்காரம் ஆகிய தத்துவங்களாலும் சூரியன், சந்திரன், மன்மதன் ஆகியோரின் தேஜஸ்ஸாலும். அமைந்தவை எட்டாவது பிரகாரத்தில் உள்ளது கதம்பவனம். அங்கு பரதேவதையின் மந்திரியான சியாமளாதேவி வசிப்பாள், பதினைந்தாவது பிரகாரத்தில் அஷ்டதிக்குபாலர்களும் வசிப்பர். பதினாறாவது ஸேனநாயகி தண்டினீ அல்லது வராகியின் இருப்பிடம். இங்கும் சியாமளாதேவிக்கு ஓர் இருப்பிடம் உண்டு. பதினேழாவதில் யோகினிகள்; பதினெட்டில் மஹாவிஷ்ணு: பத்தொன்பதில் ஈசானன்; இருபதில் தாராதேவி, இருபத்தி ஒன்றில் வாருணீ; இருபத்திரண்டாவது அகங்காரக் கோட்டையில் குருகுல்லாதேவி; இருபத்து மூன்றாவது சூரியப் பிரகாசத்தில் மார்த்தாண்ட பைரவர்; இருபத்திநாலில் சந்திரன்; இருபத்தைந்து சிருங்கார வனத்தில் மன்மதன்; இதற்குள் மகாபத்ம வனமும், கற்பக விருட்சகத் தோப்பும், அதன் நடுவில் சிந்தாமணி கிருஹம். அதன் அக்கினி மூலையில் சிதக்னி குண்டம். கிழக்கு துவாரத்தில் இருபுறமும் மந்திரிணீ தண்டினீ தேவிகளின் கிரகங்களும் உள்ளன. நான்கு துவாரங்களிலும் சதுராம்னாய தேவதைகள் காவலில் இருப்பார்கள். இதனுள் நவாவரணங்களுடன் கூடிய ஸ்ரீசக்கரம். அச் ஸ்ரீ சக்கரத்தின் நடுவில் ஸர்வானந்தமயம் என்னும் இடத்தில் பிந்துபீடம்; பீடத்தில் பஞ்சபிரம்மாசனத்தில் ஸதா சிவனுடைய மடியில் மஹாதிரிபுரசுந்தரி எழுந்தருளியிருப்பாள்,

(தொடரும்)

# குறட்பாவின் திறப்பாடு

(திரு. வ. பெருமாள், எம். ஏ., பி.டி., எம். ஆர். ஏ. எஸ்.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி, உரிகம்.
கோலார் தங்க வயல், மைசூர் மாநிலம்.)

திருக்குறளும் பதினெண்கீழ்க் கணக்கும்

(முன் இதழ் தொடர்ச்சி)

*அம்முனி தன்னோ டிவ்வா றருச்சுனன் புகல வில்லிற்*
*கைம்முனி வனுஞ்செஞ் சோற்றுக் கடன்கழித்*
*திடுதல்வேண்டும்*

துரோணரின் செய்ந்நன்றியறிதலை அவர் கூற்றிலிருந்தே நாம் அறிகின்றோம். குந்திதேவி கன்னனிடம் சென்று தான் அவள் தாய் என்பதை உணர்த்தி "குருகுலாதிபர்க்குங் குரிசிலாய்வாழ்வு கூர்தி" என்று வேண்டுகின்றாள். கன்னன் துரியோதனனுடைய செய்ந்நன்றியை விளக்கிக் கூறிவிட்டு தான் அவனுக்கு செஞ்சோற்றுக் கடன்கழிக்கக் கடமைப்பட்டிருப்பதாக மாற்றம் அளிக்கின்றான்.

*"திடம்பழுத் திடுவே விராசராச னுக்குச்*
*செகுமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்*
*கடன்கழிப் பதுவே எனக்கினிப் புகழும்*
*கருமமும் தருமமும் என்றான்"*

*"செருவிலெனை துயிரனைய தோழற்காகச்*
*செஞ்சோற்றுக் கடன் கழித்தேன்"*

என்று வில்லிப்புத்தூராழ்வார் கர்ணன் வாயிலாகச் செய்ந்நன்றியறிதலின் பெற்றியை எடுத்துரைக்கின்றார். இத்தகைய பண்பு கும்பகர்ணனிடமும் சிறந்து விளங்கிற்று.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு"*

என்பது வள்ளுவனார் வாய்மொழி.

## வள்ளுவரின் சொல்நயம்

அறவுரை கூறுவதில் வள்ளுவர் இன்சொற்களையே பெரிதும் வழங்குகின்றார். இடித்துரைக்கும் சொற்களைவிட இன்சொற்களே அதிகம் வன்மை வாய்ந்தவை என்பது ஆசிரியரின் உட்கருத்து. ஒரு மாநாட்டிற்கு வருகின்ற பேரறிஞர்களை வருக, வருக என்று வரவேற்பதும் வாழ்க வாழ்க என்று வாழ்த்துவதும் உலக இயல்பாக அமைகின்றது. இதுபோன்ற சமயங்களில் நாம் வியங்

கோள் வினைமுற்றுக்களை வழங்குவதன் மூலம் நம் இன்சொற்களை வெளிப்படுத்துகின்றோம். அதுபோன்றே வள்ளுவனாரும் பற்பல குறட்பாக்களில் வியங்கோள் வினைமுற்றுக்களை வழங்கி இருப்பது ஆசிரியருடைய சொல்நயத்தை புலப்படுத்துவதாகும். எடுத்துக் காட்டாக 'ஒழுங்காருக் கொள்க', 'கற்க கசடற', 'உண்ணற்க கள்ளை', தன்னுயிர் நீப்பினும் செய்யற்க'. 'வேண்டின் உண்டாகத் துறக்க', 'வருகமன் கொண்கன்', 'நீடு வாழ்க என்பாக்கறிந்து' 'பரிந்தோம்பிக்காக்க', 'நாகாக்க', 'நாடோறும் நாடுக', 'சொல்லுகச் சொல்லை', 'எண்ணித் துணிக' ஆகிய குறட்பா தொடர்கள் சிந்திக் கத் தக்கதன. கூறவேண்டிய கருத்துக்களை உறுதியாக அறிவுறுத் தும்பொருட்டு வியங்கோள் வினைமுற்றைக் குறளில முதலிலேயே பெரும்பாலும் வழங்குவது ஆசிரியர் இயல்பு. "கற்பவை கசடறக் கற்க" என்று இயம்புவதற்கு மாறாக "கற்க கசடறக் கற்பவை" என்று கூறியிருப்பது கற்றலின் இன்றியமையாமையையும் 'கற்க' என்ற சொல்லின் உறுதிப்பாட்டையும் தெற்றென விளக்கா நிற் கின்றது. அதுபோன்றே 'கள்ளை உண்ணற்க' என்று இயம்பு வதற்கு மாறாக 'உண்ணற்க கள்ளை' என்று உரைத்திருப்பது இங்கு நோக்கத்தக்கது. சீதையைக்கண்ட அநுமான் இராமனிடம் அவளைப்பற்றி கூறுங்காலை "கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்" என்று இயம்புவது இவண் சிந்திக்கத்தக்கதாகும்.

## இடித்துரைத்தல்

நாட்டாருக்கு நல்லவை நவில்வதில் இடித்துரைத்தல் என்பது ஒருவகை: ஒருவன் நன்னெறி விலகி அல்லவை செய்யுங்காலை அவன் உள்ளம் உணருமாறு நீதியை அறிவுறுத்துவதே இடித் துரைத்தல் எனப்படும். ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழ்வது நட்பாகாது. நண்பன் ஒழுக்க நெறியினின்றும் தவறுங்காலை இடித் துரைப்பதே சிறந்த நட்பிற்கு அறிகுறியாகும்.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"

இடித்துரைக்கும் இயல்புடையவர்களையே ஒருவன் தனக்கு நண்ப ராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். இடித்துக் கூறும் அமைச்சரில் லாத வேந்தன் ஏமமற்றவனாவான். அவன் தானாகவே கெடுவான் என்பது உறுதி.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

இராவணன் வீழ்ச்சிக்கு அடிப்படையான காரணம் இடித்துரைக் கும் அமைச்சர்கள் அவன்பாலில்லாததேயாகும், என்று கம்பர் கூறுகின்றார்,

"கடிக்கும்வல் அரவு கேட்கும் மந்திரம் கனிக்கின் றேயை
அடுக்கும்ஈது அடாதிதென்ற ஏதுவோடு அறிவுகாட்டி
இடிக்குநர் இல்லை; உள்ளார் எண்ணியது எண்ணி உன்னை
முடிக்குநர் என்ற போது முடிவன்றி முடிவதுண்டோ"

நெடுங்கிள்ளி மதிலையடைத்துக் கொண்டு நலங்கிள்ளியுடன் போர் புரிய முன்வராதிருந்தான். நலங்கிள்ளியின் முற்றுகை நீடித்த காரணத்தால் கோட்டையுள் உறைந்த மக்கள் மிக்க அல்லலுற்ற னர். இதைக் கண்டார் கோவூர் கிழார் என்னும் புலவர் பெரு மான். அவன் செயலின் குற்றங்களை எடுத்துக் கூறிவிட்டு இறுதி யாக "நாணுத்தக உடைத்து இது காணுங் காலே" என்று இடித் துரைக்கின்றார். இவ்வாறு இடித்துரைக்கும் அமைச்சரையும் புலவரையும் வேந்தன் தனக்குத் துணையாகக் கொள்வானாயின் அவனை யாரும் அழிக்க முடியாது.

"இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்".

"அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்". (நட்பாராய்தல்)

## தமிழர் வாழ்வில் வள்ளுவர் வாய்மொழி

கோவலனின் பிரிவாற்றாமையால் கண்ணகி துன்புறுகின்றாள். இந்நிலையைக் கண்ட தேவந்தி என்ற பார்ப்பனத்தோழி கண்ணகி யிடம் 'சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய துறைகளில் மூழ்கி காமவேளைத் தொழுதால் கொழுநனுடன் சேர்ந்து இன்பமாக வாழலாம் என்று ஆலோசனை கூறுகின்றாள். இதைச் செவியுற்ற கண்ணகி குலப்பெண்டிர் கணவனைத் தவிர பிற தெய்வங்களைத் தொழுவது "பீடன்று" என்று ஒரே சொல்லில் மாற்றம் உரைக் கின்றாள். கற்புக்கரசி கண்ணகி வள்ளுவனாரின்

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தாள்.

தமிழகத்தில் வாழ்ந்த வள்ளல்களும் வேந்தர்களும் பல சமயங் களில் கொடைமடம் பட்டிருக்கின்றனர். தோட்டிமலைக்குத் தலைவ னான நள்ளி காட்டிற்கு வேட்டையாடச் சென்ற காலை அவன் களைப்புற்றிருந்த பாணனையும் அவன் சுற்றத்தையும் கண்டான். உடனே சுள்ளிகளைச் சேகரித்து தீமூட்டி ஊனைப் பக்குவப்படுத்தி அவர்களுக்குக் கொடுத்தான். அவர்கள் உண்டு களைப்பாறியபிறகு நள்ளி அவர்களை நோக்கி,

"பாண! நீ பெறுதற்குரிய பரிசில் என்னிடம்
இவண் இல்லை, எனவே இதைப் பெற்றுக் கொள்க''

என்று கூறி தன் கழுத்திலுள்ள முத்து மாலையை யளித்துவிட்டு தான் யார், எந்த நாட்டைச் சார்ந்தவன் என்ற பாணனின் வினவிற்கு விடையளிக்காமல் அவனிருந்து நீங்கினான். ''வலதுகை கொடுத்ததை இடதுகை அறியக்கூடாது'' என்ற செம்மொழிக்கு எடுத்துக்காட்டாக அமைந்தான். கூருமை நோக்கிக் குறிப்பறிந்து பாணன் வாய்விட்டுப் பொருளைக் கேட்குமுன்பு அவனுக்கு ஈந்த நனிமலை நாடன் நள்ளி

''இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள''

என்ற திருவள்ளுவனார் வாய்மொழிக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தான் என்று இயம்பினால் அது சற்றும் மிகை யாகாது.

சேரநாட்டை ஆண்ட சேரமான் இரும்பொறை சோழ வேந்தன் செங்கணானுடன் போரிட்டுத் தோற்றான். சோழனால் சிறைப் பிடிக்கப்பட்ட இரும்பொறை சிறைக்கோட்டத்தில் இருக்கையில் மிகவும் தாகமுற்று சிறை காப்பாளனைத் தண்ணீர் வேண்டினான். சிறை காப்பாளன் காலம் தாழ்த்துத் தண்ணீர் கொணர்ந்தான். அதைப் பருகி உயிர்வாழ விழையாதவனாய் கலத்தைக் கையில் ஏந்திக்கொண்டு ஒரு கவி பாடினான். பிறகு ஆவி துறந்தான். ''மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே'' என்ற கருத்தைக் கொண்ட இரும்பொறை

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்''

என்னும் திருக்குறளைத் தனி வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தான்.

''இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு''

என்ற பெருநாவலரின் பொன்மொழிக்குப் பெருஞ்சித்திரனார் விதிவிலக்கல்லா. அவரிடமுள்ள உயர்ந்த அருங்குணம் வறுமையிற் செம்மையேயாகும். நல்குரவின் வடிவமாகிய புலவர், தன் வறுமையைத் தீர்க்கும்பொருட்டு தகடூரையாண்ட அதியமான் நெடுமாநஞ்சியின் கோயிலைக் குறுகினார். அரசன் அமைச்சனின் வாயிலாகப் பரிசளிக்க, அதைப் பெறாது அவனின்று நீங்கி வெளிமான் என்ற வள்ளலை யடைந்தார். வெளிமான் உறங்க விழைந்தானாதலால் அவன் இளவல் இளவெளிமானிடம் பாவலர்க்குப்

பரிசளிக்குமாறு பகர்ந்தான். இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாது புலவர் அவ்விடத்தைவிட்டு நீங்கி குமணவள்ளலிடமிருந்து யானைப் பரிசிலைப் பெற்றுப் பெருமிதத்துடன் திரும்பி வரும்பொழுது இளவெளிமானிடம் ஏறுபோல் பீடு நடையுடன் சென்று தன் பெருமையையும் இளவெளிமானின் சிறுமையையும் உணர்த்தினார். இன்மையின் காரணமாகத் தம் உய்ந்த பெறுமிதத்தினின்றும் சற்றும் வழுவாத பைந்தமிழ்ப் பாவலர் பெருஞ்சித்திரனார்

(தொடரும்)


திருச்சி சமயபுரம்

# நேசர் வைத்தியசாலையின்

## பரம்பரை அனுபவ மருந்துகள்

துப்பாக்கி மெழுகு :

தங்கலிங்க மெழுகு :

தேவாமிர்தம் :

பிண்டத்தைலம் :

சஞ்சீவித் தைலம் :

உபயோகியுங்கள்.

**P. L. பெர்னண்டஸ்**

சமயபுரம் P. O.

திருச்சிராப்பள்ளி.

# கைமுறை அனுபவ வைத்தியம்

**சில கைகண்ட அனுபவ முறைகள்**

(சித்த வைத்தியர் பென்சாமின், லாலுகாபுரம், திருநெல்வேலி)

(முன் இதழ் தொடர்ச்சி)

## 12. சீந்தில் சூரணம்

*சுத்திசெய்த சீந்தில்—10 பலம், கரிசாலை சூரணம்—10 பலம், சுத்திசெய்த பூ நாகப்பூச்சி—3 பலம்.*

*(பூநாகப் பூச்சியை பாலில் போட்டு வைத்தால் மண் எல்லாம் நக்கும், இதை இரண்டுதடவை பாலில் போட்டு எடுத்தால் சுத்தி.)*

*மூன்று பொருளையும் நன்கு வெயிலில் காயவைத்து, உலர்த்தி இடித்துச் சூரணம் செய்து. அந்த சூரணத்தை மூன்றுதடவை வடிகட்டி (சலித்து எடுத்து) வைத்துக்கொள்ளவும்.*

**அளவு:** *தினமும் காலையும் மாலையும் ஒரு வெருகடி அளவு நெய்யில் மத்தித்து சாப்பிடவேண்டும்.*

**தீரும் நோய்கள் :** *மேக நோய்கள், சுவாசம், எட்டுவகை காச நோய்கள், இரைப்பு, சயரோகம் முதலியன.*

*இதை தேனிற் குழைத்து உட்கொண்டால், வாயுவென்ற வாதமொடு, வரட்சி பித்தம், தேயுவென்ற கர்மநோய்கள், நகப் புண், பீனிசம் முதலியன தீரும். இதை சர்க்கரையிற் கலந்து உண்டால் மயிர்வெட்டு, புழுவெட்டு, கண்தெளிவு முதலியன தீரும்.*

**பத்தியம் :** *புளி, புகையிலை நீக்கவும்.*

# தாதுபுஷ்டிக்கு அல்வா

**(சித்த வைத்தியர் எஸ். அம்பி, ஹோசூர்)**

*தேறின சாதிக்காய் 2, சாதிபத்திரி 1 பலம், வால்மிளகு 1 பலம், முருங்கை விதை 1 பலம், கெஞ்சா விதை 1 பலம், அபின் அரையணு எடை, ஆலம் விதை 1 பலம், அரசவிதை 1 பலம், பரங்கிப்பட்டை 1 பலம் இவற்றை இளம் வறுவலாக வறுத்து சர்க்கரை இரண்டு பலம் நெய் கலந்த அல்வாபோல் செய்து சாப்பிட்டுவர தாதுபுஷ்டி யுண்டாகும்.*

### வெள்ளைக்கு மருந்து

*வடக்கே போன ஆவிரம் வேர் ½ பலம், இலந்தம்வேர் ½ பலம்' மருக்காரை வடவேர் ½ பலம், தோலுரித்த இலந்தம் பிசின்*

_ பலம் இவைகளைப் பாலில் அரைத்து சாப்பிடவும். இவ்விதம் 7 நாள் சாப்பிட்டு வந்தால் மஞ்சள், வெள்ளை, இரத்தவெள்ளை தந்திமேகம் முதலிய எல்லாவித வெள்ளையும் நீங்கும்.

பத்தியமில்லை, ஆனால் ஸ்திரீ சம்போகம்கூடாது

**காரீய பஸ்பம்** : ஆடாதோடை ரசத்தையும் காரீயத்தையும் சரியிடை யெடுத்து ஒரு சட்டியில் போட்டு அடுப்பேற்றி ஆடா தோடை கொம்பினால் கிண்டிக் கிண்டி 4 ஜாமம் வறுத்தால் பஸ்பமாகும்.

**காரீய செந்தூரம்** : மேற்படி காரீய பஸ்பத்தை கல்வத்திலிட்டு ஆடாதோடைச் சாறு விட்டு 3 சாமம் அரைத்து பில்லைகள் செய்து காய்வைத்து இருபது வரட்டியில் புடம் போடவும், இப்படி பத்து புடம் போட்டு ஓமக் கியாழத்தினால் பத்து புடம் போட்டு கொட்டைக் கரந்தை சாற்றினால் பத்து புடம் போட்டு வெற்றிலைச் சாற்றால் அரைத்து பத்துதரம் கஜபுடம் போட்டால் மிகவும் வலிவான செந்தூரமாகும். வியாதிக்குத் தக்க அனுபானங்களில்விட அனேக வியாதிகள் தீரும்.

## அப்பிரசுவர்ண குணம்

4 விதம் உண்டு, அதாவது சிவப்பு, வெள்ளை, சொர்ண அப்பிரகம், கிருஷ்ண அப்பிரகம். சிவப்பு வாயு உபத்திரவத்தை கண்டிக்கும், வெள்ளை: சிலேத்தும வியாதியை கண்டிக்கும், சொர்ணம்:- உஷ்ணத்தை கண்டிக்கும், கிருஷ்ண:-சகல வியாதிகளையும் கண்டிக்கும்.

## அப்பிரக செந்தூரம்

சுத்தி செய்த அப்பிரகத்தை கல்வத்திலிட்டு பசு நெய்யில் 1 நாள் அரைத்து கஜபுடம் போடவும். நெய்யில் அரைத்து 3 புடம் போடவும், பிறகு இலைக்கள்ளிச் சாற்றால் அரைத்து 3 புடம் போடவும், வெள்ளாட்டுப் பாலால் அரைத்து 3 புடம் எருக்கம் பாலால் அரைத்து 3 புடம்,ஆலம் பாலால் அரைத்து 3புடம்,அதன் பிறகு அரசம்பட்டைச் சாறு, பொன்னாங்கனிச் சாறு கலியாண பூசணைச் சாறு, தண்ணீர் விட்டான் கிழங்குச் சாறு, கொட்டைக் கரந்தைச் சாறு நொச்சிச்சாறு, ஆடாதோடைச் சாறு சிந்தில் வேர் சாறு, விழுதியிலைச் சாறு, பூவரசம்பட்டைச் சாறு, இவற்றின் சாற்றினால் தனித்தனியாய் ஒவ்வொரு நாள் அரைத்து ஒவ்வொரு புடம் போடவும் இவ்விதமாய் நாலு நாள் அரைத்து ஒவ்வொரு புடம் போட உயர்ந்த செந்தூரமாகும்.

குணம் ஆகும் வியாதிகள்:—வாந்தி - அரோசிகம், சுரம் ,மேகம், படுமூத்திரம், மூலரோகம் தீரும்.

# சித்தர் நவலோக கல்பம்

REGD

இது ஆஸ்துமா, யானைக்கால், வெண்குஷ்டம், குழிப்புண்
ரணம், பெருத்த சரீரம் சிறுக்க, மற்றும் பல
வியாதிகளைத் தீர்க்க உதவுகிறது. இந்த

*சித்தர் நவலோக கல்பம்*

சர்க்கார் ரசாயன சாலையில் பரிசோதிக்கப்பட்டது

நாங்கள் சித்த சாஸ்திரப்படி பஸ்பம்,
செந்தூரம், சுண்ணம், மெழுகு, கடடுவகை,
எண்ணை. தைலம், லேகியம், சூரணம் முதலியன
தயாரிக்கிறோம். ஆகவே தாங்கள் ஒருமுறை எங்கள்
வைத்தியசாலைக்கு விஜயம் செய்யுங்கள்.

*கிளை வைத்தியசாலை :*

*G. S. T.* ரோடு, 39-வது மைல், பாலாற்றங்கரை,

மாமண்டூர், வடபாதி. *(செங்கற்பட்டு ஜில்லா)*
*மேற்கண்ட கிளை வைத்தியசாலையில்*

*பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில்*

மற்ற நாட்களில் சென்னையில்

காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரையில்
நாமே வியாதியஸ்தர்களை கவனிக்கின்றோம்.

*சித்த வைத்தியர் :*

சாது வீ. நாராயணசாமி பிள்ளை,

**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை**

5, *ஜெனரல் சாமிநாயக்கன் தெரு,*

திருவல்லிக்கேணி :: சென்னை-5

தொலைபேசி எண் : 84786



Printer : R. Ayyalu Naidu, Valluvar Achagam, 17-A Padavattamman Koil St. Kosapet, Madras-12.

Editor & Publisher : His Holiness, Sri-La-Sri Sunderananda Sarasvathi, No. 9, Gajapathi Naidu St., Shenoynagar, Madras-30.

NANDHI Regd. No. M-7788

ரிஜிஸ்டர், நிர் : 3010

## மந்தித்தோப்பு மணிகட்டி சுவாமிகள்

*கைமுறை அனுபோக*

# சர்வரோக சஞ்சீவித் தைலம்

*ஸ்நானம் செய்யுங்கள்*

- வாரம் இரு முறை ஸ்நானம் செய்து வந்தால், சரும நோய்கள் வரவிடாமல் தடுப்பதுடன், சரும வளர்ச்சியையும் ஒழுங்காக்குகிறது.
- மிதமிஞ்சிய உஷ்ணத்தைத் தணிப்பதுடன் மூளையைக் குளிர்ப்பித்து, கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து சரீரத்திற்கு நல்ல அழகையும் தருகிறது.
- கண்ணெரிவு, கணணீர் வடிதல், மேகநீர்க் கம்மல், மண்டை வரட்சி, படர் தாமரை, சொறி, சிரங்கு, மேகநீர்ப் பத்து, வங்கு, தழுவணை, செவ்வட்டைக் கடி, வெடி சூலை, மூலச் சூடு, மேல் கால் காந்தல் கை கால் ஊரல், தேமல், கிரந்தி, பித்த மயக்கம், கொடிய பத்து முதலிய துர்நீர் சம்பந்தப்பட்ட சகல சர்ம வியாதிகளையும் குணப்படுத்துகிறது.
- யாவரும் சாதாரண எணணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக தைல ஸ்நானம் செய்வது மிகவும் நல்லது.
- வாரம் இரு முறை ஸ்நானம் செய்து வந்தால் போதும். அதன் மகத்தான சக்தியை நீங்களும் அறிந்து கொள்வீர்கள்.

## பாட்டில் 1க்கு விலை ரூ. 3-75

***எல்லா ஊர்களிலுமுள்ள எமது ஏஜெண்டுகளிடம் கிடைக்கும்.***

---

***தயாரிப்பவர்கள்:*** **ச. பெ. வடிவேல் நாடார் அன் ஸன்ஸ்**
மந்தித்தோப்பு மணிகட்டி சுவாமிகள் சித்த வைத்தியசாலை
25, டவுன் ஹால் ரோடு த. பெ. நிர். 106, மதுரை-1
தந்தி: "THAILAM" போன்: 2745.